[12th March 1963

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பொதுவாகவே ஒரு காலத்தில் இருந்த அபிப்பிராயம் மற்ற காலங்களிலும் இருக்கவேண்டும் என்பது இல்லை. அபிப்பிராயங்கள் அந்தந்த காலத்திற்கு ஏற்ப மாறக்கூடும். அந்தந்த சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறும் சூழ் நிலைக்குத் தக்கவாறும் மாறுபடும். கரை போட்ட வேஷ்டியையும் கலர் சேலையையும் கைத்தறிக்கு ரிசர்வ் பண்ணுவது என்று சொன்னால் மில் துணியில் தயாராகக்கூடிய வெள்ளைத் துணிகளுக்கு ஸ்கிரீன் ப்ரிண்ட் போடப்பட்டு அது காம்பெடிஷனில் வந்து விடும். அதனால்தான் மில் துணிகளுக்கு செஸ் வரி விதித்து செஸ் மூலமாக கைத்தறிக்கும் மில் துணிக்கும் விலையை ஏற்படுத்தி மில் துணிக்கு அதிகப்படியான விலை வைத்து கைத்தறி துணிக்கு ரிபேட் கொடுத்து கூட்டுறவு சங்கங்கள் மூலமாக குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கும் வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். செஸ் விதித்த பிறகும் அதற்கு மேலும் ஒழிக்கலாம் என்று சொன்னால் அதற்கு அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன்.

G.C.I.M.

* 197 *Q*.—Sri A. P. DHARMALINGAM (on behalf of Sri M. V. KARIVENGADAM): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) what is the status and position of G.C.I.M. Medical students after the abolition of the G.C.I.M. Medical course;

(*b*) the total number of G.C.I.M. degree holders in Government service; and

(*c*) whether the Government propose to allow them to appear for final M.B.B.S. Examination?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஜி. சி. ஐ. எம். முதல், இரண்டாம் ஆண்டு மாணவர்கள் 262 பேர் இணைக்கமான எம். பி.பி. எஸ்., (Integrated M. B. B. S. Course) இரண்டாம் ஆண்டு வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஜி. சி. ஐ. எம். மூன்றும் ஆண்டு, நான்காம் ஆண்டு மாணவர்கள் 150 பேர் டி.எம். அண்டு எஸ்.தேர்வு (D.M. & S. Examination) எழுத அனுமதிக்கப்பட்டனர். நாட்டு மருத்துவத்திற்கு (Indigenous Medicine) பதிலாக, ஆங்கில மருத்துவம் (Modern medicine) கூடுதலாகப் பயின்ற பின்னரே அவர்கள் அவ்வாறு அனுமதிக்கப்பட்டனர். ஜி. சி. ஐ. எம். இறுதியாண்டு மாணவர்கள் 187 பேர் ஜி. சி. ஐ. எம். இறுதி தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர்.

(இ) 257 பேர்.

(உ) இல்லை.

திரு. ஆ. துரை அரசன் : ஸார், ஜி. சி. ஐ. எம். பட்டம் பெற்று ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் அரசினர் மருத்துவ மனையில் வேலை செய்து விட்டு ஆறு மாத காலம் பரீட்சைக்குச செல்ல இருப்பதால் அவர்களுடைய முந்திய சர்விஸ் பாதிக்கப்படுமோ என்று அஞ்சுகிறார்கள். அதன் விவரம் அறிய விரும்புகிறேன் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சர்விஸ் ஒன்றும் பாதிக்கபட மாட்டாது. அந்தக் காலம் இவர்களுடைய சர்விசுடன் சேர்க்கப்படும்.